DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

Case No. S.C.No.138/2018
Miscellaneous
Preliminary Register
Sessions

Deposition of witness for — Prosecution P.W.8
Defence
Court

Name விஜயலெட்சுமி
Father's Name/ Husband's Name
Village
Taluk
Age

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2023.

எதிரி ஆஜர்

<u>முதல் விசாரணை</u>

நான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூாரி நுண் கதிர் பிரிவில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணியாற்றி செப்டம்பர் மாதம் 2013ம் ஆண்டு பணிஓய்வு பெற்றுள்ளேன். நான் பணியில் இருந்த போது 18.06.2013 அன்று வீரம்மாள் என்ற 55 வயது மதிக்கத்தக்க நபர் எங்கள் பிரிவிற்கு நுண் கதிர் படம் எடுப்பதற்காக அனுப்பப்பட்டிருந்தார். அவருக்கு நெஞ்சுப்பாகம், இடது உள்ளங்கை பாகமும் நுண்கதிர்படம் எடுக்கப்பட்டது. நெஞ்சுப்பாகத்தில் எலும்பு முறிவு இல்லை,. இடது உள்ளங்கைப்படத்தில் 3வது உள்ளங்கை விரல் எலும்பு உடைந்து காணப்பட்டது. மேற்சொன்ன நபருக்கு இடது கையில் ஏற்பட்டிருந்த எலும்பு முறிவு காயத்தை குறிப்பிட்டு கருத்துரை வழங்கியுள்ளேன். அந்த கருத்துரை அ.த.சா.ஆ.7, மேற்சொன்ன காயம் கம்பால் தாக்கியதால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- விஜயலெட்சுமி

Sd/- D.ஜெயகுமாரி ஜெமி ரத்னா,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

Case No.	S.C.No.138/2018		
Miscellaneous			
Preliminary Register			
Sessions			
Deposition of witness for		Prosecution Defence Court	P.W.9
Name	இங்கர்சால்		
Father's Name/ Husband's Name			
Village			
Taluk		Age	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2023.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்பொழுது புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்தவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 14.06.2013 அன்று இரவு புதுக்கோட்டை அரசு தலைமை மருத்தவமனையில் பணியில் இருந்த போது ஆலங்குடி அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட செல்வம் வயது 32, த/பெ, சுந்தரம் பள்ளிவாசல் வீதி ஆலங்குடி, என்பவரை உள் நோயாளியாக அனுமதித்தேன். அவருடைய வலதுகையில் இருந்த காயத்தால் வலது கை நுண்கதிர்படம் எடுத்துப்பார்த்ததில் எலும்பு முறிவு இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர் 17.06.2013 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரை விடுவித்த மருத்துவரின் கருத்துரு சாதாரண காயம் என்று கூறியிருந்தார். என்னை இது சம்மந்தமாக ஆலங்குடி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்சொன்ன செல்வம் என்பவரை நான் உள்நோயாளியாக

அனுமதித்ததற்காக விபத்துப் பதிவேடு அ.த.சா.ஆ.8 (நகல்) (எதிரி தரப்பு வழக்கறிஞர் இது நகல் என்று ஆட்சேபனை செய்கிறார்)

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- இங்கர்சால்

Sd/- D.ஜெயகுமாரி ஜெமி ரத்னா,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

Case No. S.C.No.138/2018
Miscellaneous
Preliminary Register
Sessions

Deposition of witness for — Prosecution P.W.10
Defence
Court

Name முத்தையா
Father's Name/ Husband's Name
Village
Taluk — Age

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2023.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவர் அலுவலராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 14.06.2013 அன்று இரவுப்பணியில் இருக்கும் போது செல்வம் என்ற நபர் தன்னை இனம் தெரிந்த இரண்டு நபர்கள் அரிவாளால் அன்று இரவு 08.15 மணியளவில் அதில் ஒருவர் அரிவாளால் தாக்கியதாக கூறி மருத்துவ சிகிச்சைக்காக ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு கீழ்கண்ட காயம் காணப்பட்டது. காயம் 1, வலதுகையின் உள்பக்கத்தில் சுண்டுவிரலுக்குக்கீழ் ஒரு வெட்டுக்காயம் 10x 3 செமீ அளவில் காணப்பட்டது. அவருக்கு முதல் சிகிச்சை தையல் போட்டு மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு உள்நோயாளியாக 14.06.2013 லிருந்து 17.06.2013 வரை சிகிச்சை பெற்றார். அவருக்கு கதிர்வீச்சு படம் எடுக்கப்பட்டு சாதாரண காயம் என்று சான்று

அளிக்கப்பட்டது. மேற்சொன்ன நபருக்கு நான் வழங்கிய விபத்துப்பதிவேடு மற்றும் காயச்சான்று அ.த.சா.ஆ.9, வீரம்மாள் என்ற 55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சித்திரைக்கண்ணு என்ற அவரது மகனால் மேற்கூறிய தேதியில் 09.00 மணியளவில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார். அவருக்கு மேற்கூறிய சம்பவம் அன்று இரவு 08.45 மணியளவில் நடந்ததாக கூறினார். அவர் தன்னை இனம் தெரிந்த இரண்டு நபர்கள் அரிவாள் கொண்டு தாக்கியதாக கூறினார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. காயம் 1. தலையின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வரை நீண்டிருந்த ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் அளவு 15 x 1 செமீ ஆகும். காயம் 2. இடது கையின் உள்பகுதியில் 3 x 1 x1 செமீ அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது. காயம் 3. வலது முன்கையில் இரத்தம் கன்றிய காயம் காணப்பட்டது. அவர் மேல்சிகிச்சைக்காக புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கிருந்து தஞ்சாவூர் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். அவர் 14.06.2013 முதல் 18.06.2013 வரை புதுக்கோட்டை மாவட்ட அரசு மருத்துவமனையிலும் 18.06.2013 முதல் 29.06.2013 வரை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். அவருக்கு மேற்கூறிய காயம் 1 சாதாரண காயம் என்றும் காயம் 2, 3 கொடுங்காயங்கள் என்று சான்று அளித்துள்ளேன். நான் வழங்கிய காயச்சான்று அ.த.சா.ஆ-10, மேற்சொன்ன இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்டிருந்த காயங்கள் அவர்கள் சொன்ன நேரத்திலும் விதத்திலும் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்க விவரம் சொல்லியுள்ளேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- முத்தையா

Sd/- D.ஜெயகுமாரி ஜெமி ரத்னா,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

Case No. S.C.No.138/2018

Miscellaneous

Preliminary Register

Sessions

Deposition of witness for — Prosecution P.W.11 / Defence / Court

Name கீதா

Father's Name/ Husband's Name

Village

Taluk — Age

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2023.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் தற்பொழுது திருச்சி மாநகர தெற்கு போக்குவரத்து புலனாய்வில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.06.2013 அன்று ஆலங்குடி காவல்நிலைய உதவி ஆய்வளாராக பொறுப்பில் இருந்த போது ஆலங்குடி அரசு மருத்துவமனையிலிருந்து 21.00 மணியளவில் வரப்பெற்ற தகவலைப்பெற்று அரசு மருத்துவமனைக்குச்சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஆலங்குடி பள்ளிவாசல் தெருவைச்சேர்ந்த சுந்தரம் மகன் செல்வம் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் சேர்ந்து நிலையக்குற்ற எண்.166/2013 பிரிவு 294(b), 324, 307 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து, வழக்கின் புகார்மனுவையும, முதல் தகவல் அறிக்கையும்ஆலங்குடி நீதித்துறை நடுவருக்கு அனுப்பிவைத்தேன். ஒரு நகலை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் விசாரணைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.11, வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர்

விசாரிக்க விவரம் சொல்லியுள்ளேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- கீதா

Sd/- D.ஜெயகுமாரி ஜெமி ரத்னா,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

Case No.	S.C.No.138/2018		
Miscellaneous			
Preliminary Register			
Sessions			
Deposition of witness for		Prosecution	P.W.12
		Defence	
		Court	
Name	சமரசம்		
Father's Name/ Husband's Name			
Village			
Taluk		Age	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2023.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்சமயம் தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். கடந்த 14.06.2013 அன்று நான் ஆலங்குடி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் கீதா என்பவர் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எனக்கு அனுப்பியிருந்த ஆலங்குடி காவல் நிலைய குற்ற எண்.166/2013 பிரிவு 294(b), 324, 307 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலை பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். பின்னர் அந்த தினம் 22.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான ஆலங்குடி பள்ளிவாசல் தெரு வாதியின் வீட்டு முன் வந்து சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜா என்ற சாகுல் அமீது, சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.12, இவ்வழக்கில் சாட்சிகள் செல்வம் என்ற மாரியப்பன்,

சித்திரைக்கண்ணு, வீரம்மாள், ரெத்தினம், மாரிக்கண்ணு, தினேஷ், நாடிமுத்து, ராஜா என்ற சாகுல் அமீது, சிதம்பரம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் 15.06.2013 அன்று 11.00 மணிக்கு ஆலங்குடி டவுன் பாத்தம்பட்டிமுக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை ரவிக்குமார், சங்கர் கணேஷ் ஆகியோர் கைது பற்றிய காரணம் கூறி கைது செய்தேன். சாட்சிகள் ராஜா என்ற சாகுல் அமீது, சிதம்பரம் ஆகியோர் முன்னிலையில் எதிரி ரவிக்குமாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.13, பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 15.06.2013, 12.30 மணிக்கு எதிரி ரவிக்குமார் பயன்படுத்திய வழக்கில் சம்மந்தப்பட்ட தடயமான அரிவாளை எதிரி ரவிக்குமார் வீட்டிற்கு அருகில் இருந்த கருவைக்காட்டில் இருந்து சாட்சிகள் ராஜா என்ற சாகுல் அமீது, சிதம்பரம் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 12.45 மணியளவில் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் எதிரி சங்கர்கணேஷ் பயன்படுத்திய மொத்தம் 44 செமீ நீளமுள்ள அரிவாள் ஒன்றை மகஜரில் கைப்பற்றினேன். அந்த அரிவாள் மொத்தம் 44 செமீ அதில் மரக்கைபிடி 12 செமீ நீளமுள்ளது. அந்த மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட தடயங்களுடன் காவல் நிலையம் வந்து எதிரிகளை நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்தினேன். மகஜரில் கைப்பற்றப்பட்ட தடயச்சொத்துக்களை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். இத்துடன் நான் பணியிட மாறுதல் பெற்றுச்சென்றதால் வழக்குக்கோப்பினை நிலையப்பொறுப்பு அலுவலரிடம் ஒப்படைத்துச்சென்றேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சந்தர்ப்பம் அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- சமரசம்

Sd/- D.ஜெயகுமாரி ஜெமி ரத்னா,
தலைமை குற்றவியல் நீதிபதி,
புதுக்கோட்டை.